**விசுவாச துரோகம் / தவறான போதனை / வேத புரட்டு / துர் உபதேசம் / கள்ள போதனை**






தேவ வசனத்துடன் ஒப்பிட்டு முரண்பாட்டை கண்டு தெளிய வேண்டும்.

பேசுவதற்கும் விசுவாசிப்பதற்கும் சம்பந்தமே இருக்காது.

- ❖ அடையாளம் காண் (வாழ்க்கையை கவனித்து பாரு மத் 7:16–20)
- ❖ விட்டு விலகு
- ❖ எதிர்கொள்
- ❖ பிறருக்கு எச்சரி. 2 பேது 2:1–22

**தவறான உபதேசத்தை பின்பற்றுகிறவர்களை**

- ❖ அன்போடு பொறுமையோடு கடிந்து கொண்டு வழிகாட்டு (சாந்தமாக புத்தி சொல்லு)
- ❖ சத்தியத்திற்கு நேராக திருப்ப நம்மாலான வரை முயல வேண்டும்.
  தீத்து 3:10 (யூதா 20–23)

**தவறான உபதேசம் செய்பவர்களை**

- ❖ நமது வீடுகளில் ஏற்றுக் கொள்ளக்கூடாது.
- ❖ வாழ்த்துதல் சொல்லக்கூடாது.
- ❖ அவர்களுக்கு தீங்கு செய்யக்கூடாது. 2 யோவ 10, 11

வேதாகமம்
இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

## கள்ள போதகர் , ஆத்தும திருடர் Target – இளம் விசுவாசிகள்

- ❖ தாழ்மைக்கு பதிலாக முரட்டுத்தனத்தை கையாளுகிறவர்கள்
- ❖ கற்றுக் கொள்வதற்கு பதிலாக போதிப்பலே கவனம் செலுத்துகின்றன
- ❖ எளிய மனதுள்ள மக்களை தாழ்ந்த நிலையில் காண்கின்றன.
- ❖ தனது முடிவுகளோடு ஒத்து போகாதவர்களை அறிவில்லாத மூடர்களாகக் கருதுகின்றனர்.மத் 15:9, 22:29, 1 தீமோ 6:3–5

நூதன உபதேசத்திற்கு விலகி இரு

(1) தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார். அப் 17:11,

(2) விசுவாசமுள்ளவர்களோ என்று சோதித்தறி. 2 கொரி 13:5

**தவறான போதனை உலகத்தை நோக்கி இழுக்கும்**

**கள்ள போதனை = கொஞ்சம் சத்தியம் + அதிக பொய் , ஓரளவு உண்மையிருக்கும்**

சத்தியமான சில காரியங்களை நம்புகிறவர்களாய் இருப்பார்கள்.

குறுக்கு வழியில் செல்வதை எளிமையாக இருப்பதை நம்பாதிருங்கள்

கள்ள போதகர்கள் சபிக்கப்பட்டவர்கள். கலா 1:8,9

## தேவ செய்தி

- வேத வசனம் பரிபூரணமாக விசுவாசிக்கப்படுகிறதா ?
- நமக்காக மரித்த இயேசு கிறிஸ்துவை நினைப்பூட்டுகிறதா ?
- நம்மை பரிசுத்தத்திற்கு நேராக, கீழ்படிதலுக்கு நேராக வழிநடத்துகிறதா ?
- பாவத்தை குறித்த நியாய தீர்ப்பை குறித்து பேசப்படுகிறதா ?

- உபதேசம் வேதத்தின் அடிப்படையில் உள்ளதா ? என சோதித்தறி.
- சரீர உயிர்த்தெழுதலை விசுவாசிக்கப்படுகிறதா ?

## கள்ள போதனையில் விழுவதற்கான காரணம்

- சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுவது
- அப்படிப்பட்ட காரியங்களைத் தான் அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதுமாக கேட்க விரும்புகிறார்கள்.
- அதைத் தான் விசுவாசிக்கிறவர்கள். 2 தெச 2:11, 2 பேது 2:3

**பக்கவழியாய் வந்தவர்கள்** (சாத்தானின் கையாட்கள்)

- இயேசுவின் வழியாக வராமல் வேதாகம கல்வி அடிப்படையில் மட்டும் வந்தவர்கள். யோவ 14:6
- ஊழியம் ஒரு தொழிலாகக் கருதி வந்தவர்கள். 1 தீமே 6:5,6, எபி 5:4
- பணத்திற்காக, புகழுக்காக, பிழைப்புக்காக வந்தவர்கள். 1 தீமோ 4:16
- பாவத்தை கடிந்து கொள்ளாதவர்கள். 1 தீமோ 5:20
- பாரபட்சம் காட்டுபவர்கள் யாக்.2:1–4
- புதிய ஆத்துமாக்களை சேர்க்காதவர்கள். லூக் 11:23
- தேவ ஐக்கியங்களில் துணிந்து பங்கு கொண்டு ஆவிக்குரியவர்கள் போல காட்டிக் கொண்டு தீமையைப் போதிப்பர். யூதா 1:12

## கள்ள போதகர்

- சத்தியத்தை அறிந்தவர்கள்
- தவறாய் போதிக்கிறேன் என்று அறிந்திருந்தும் அவ்வாறு செய்கிறவர்கள் தான் கள்ள போதகர், 2 பேது 2:1 (சுய நல காரியங்களுக்காக ,மனிதரை பிரியப்படுத்த ,கிடைக்கும் பணத்திற்காக)

- உண்மையாக எதை பிரசங்கிக்க வேண்டும் என்று அறிந்தவர்களாகத் தான் இருப்பார்கள்.
- மக்கள் எதை விரும்புகிறார்களோ ,எதிர்பார்க்கிறார்களோ அப்படிப்பட்ட காரியங்களை குறித்து பிரசங்கிப்பார்கள்.
- சிலர் அறியாமையினாலே தவறான போதனை கொடுப்பார்கள். (அவர்கள் சரியான காரியங்களைத் தான் போதிக்கிறோம் என்று விசுவாசித்தார்கள்). இவர்கள் கள்ள போதகர்கள் அல்ல.


**இன்றைக்கும் திருச்சபைக்கு இருக்கிற ஆபத்து கள்ள போதகர்கள்**

2 பேது 2:1 கள்ள தீர்க்கதரிசிகளை குறித்து கவனமாய் இருக்க தேவையில்லை, அது நமக்கு பிரச்சனை இல்லை, சீக்கிரமாக அவர்கள் சொல்வது பொய் என்று நிரூபித்து விடுவார்கள்.

**தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட முடியாது.**

கர்த்தருடைய பிள்ளைகள் இப்படிபபட்ட காரியங்களுக்கு பின் செல்ல மாட்டார்கள், ஏன் தெரியுமா ? யோவ 10:27 என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன்.

**ஆண்டவருடைய சத்தத்தை அறிந்திருக்க ஆடு கள்ள போதகருக்கு பின் செல்லாது.**



இரட்சிப்பு

## கள்ள போதகர்

### தனி நபர்கள்

**காயின் பண்புகள்**

- தன்னலம்
- பொறாமை
- கடவுளுக்கு எதிர்த்து நிற்றல்
- தன் விருப்பப்படி செய்தவர்

**பிலேயாம்**

- இச்சை
- பேராசை
- வாடகை பிரசங்கி

**கோரா**

- அதிகாரத்துக்கு எதிர்த்து நிற்கிறவர்கள்

### குழு

- இஸ்ரவேல் மக்கள் அவிசுவாசம்
- ஆதிமேன்மையை விட்டு விட்ட தேவதூதர்கள்
- சோதோம் கொமோராவின் மாம்சத்தை கறைப்படுத்துகிற ஆண்புணர்ச்சி

- உலகத்தை நோக்கி இழுக்கும்
- பரிசுத்தமில்லாமைக்கு நேராக வழிநடத்தும்
- செயல்படாத நிலைக்கு நேராக போதிப்பர்.

---

- மனம் போல் வாழ போதிப்பார் 2 பேது 2:10
- வருகை குறித்து, வசனத்தை குறித்து சரீர உயிர்த்தெழுதல் குறித்து பரியாசம் யூதா 18
- போதிப்பது ஒன்று விசுவாசிப்பது வேறு தீத்து 1:16

  2 பேது 2:1 ,2 தீமோ 2:16
- மாம்சத்தில் வந்த இயேசுவை அறிக்க பண்ணாதவர்கள்
  2 பேது 2:10, 1 யோவ 4:3
- பணியின் முன்னேற்றத்தை குறித்தே பேசுவார்கள்
- சுகபோகப்பிரியர் ஏசா 56:10–12
- மந்தையை சிதறப்பண்ணுவோன் ஏரே 23:2
- ஆடுகளை வழி தவற பண்ணுவோர் ஏரே 50:6
- ஆடுகளை அடித்து புசிப்போர் எசே 34:2,3
- ஆபத்தில் ஆடுகளை விட்டு விட்டு ஓடுவோர் யோவ 10:12
- தங்களை மற்றவர்களை காட்டிலும் சிறந்தவர்களாக கருதுவர் (யூதா 17–19)

---

- விபச்சார மயக்கத்தால் நிறைந்த கண்கள் 2 பேது 2:14
- பொருளாசை உடையவர்கள் 2 பேது 2:14
- இரகசிய பாவங்களில் வாழுவார்கள், அதிகாரத்தின் மேல் ஆசையுள்ளவர்கள்
- பிரபலமாக வேண்டும் என்ற ஆசையுள்ளவர்கள்
- புகழ் வர வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள்.
- முறுமுறுக்கிறவர்கள். யூதா 16
- இறுமாப்பான பேச்சு யூதா 16
- சுய இச்சையின்படி நடக்கிறவர்கள் 2 பேது 2:14
- சுகபோக பிரியர் 2 தீமே 3:4பி,5
- கனவுலகிலே வாழ்கிறவர்கள் யூதா 8
- மனுஷரை பிரியப்படுத்துகிறவர்கள் 2 பேது 4:3
- மாயமான தாழ்மை கொலே 2:19
- பிரிந்து போகிற தன்மை யூதா 19
- முகஸ்துதி யூதா 16

## <u>அவர்களின் முக்கியமான நோக்கங்கள்</u>

- வயிறு (பணம்)
- சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்து
- பொருளாசை (பண ஆசை)
- வாக்குவாதம், சண்டைகள்
- பாலுணர்வு
- சுயநலவாதிகள் (தங்களுக்காகவே வாழுகிறவர்கள்)
- தேவன் மகிமைப்படாமல், கிறிஸ்து மைய நபராய் இல்லாமல் இருக்கும்.

## <u>எச்சரிக்கை:</u>

- விசுவாசத்தை விட்டும்,
- பரிசுத்தத்தை விட்டும்,
- தேவ பக்தியை விட்டும்

விலகி செல்பவர்கள் கள்ளப் போதகத்தில் விழுந்துவிடுவார்கள்.

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

## <u>தவறான போதனைகள்:</u>

கீழே உள்ள வழிகளை பின்பற்றுகிறவர்களை ஏற்றுக் கொள்ளாதீர்கள். அவர்களது புத்தகங்களை வாசிக்காதீர்கள். வீட்டிலும் அனுமதிக்காதீர்கள்.

1. **SEVENTH DAY ADVENTIST** ஏழாம் நாள் ஓய்வுக்காக. SDA (எல்லன் ஒயிட் THE GREAT CONTRASY மைய கொள்கை. சொப்பனத்தை அடிப்படையாக கொண்டது.
2. JEHOVAH'S WITNESSES யேகோவா சாட்சிகள். WATCH TOWER காவற்கோபுரம் இயேசு முதல் சிருஷ்டி, நரகம் இல்லை.
3. CHRISTIAN SCIENCE கிறிஸ்தவ அறிவியல் – (மனநிலை வைத்திய மையமானது) இயேசு மனிதனே, நரகம் இல்லை.
4. THE UNIFICATION CHURCH MOONIES ஒற்றுமைப்படுத்தும் சபை முணீஸ். மூன்– பீரண மனிதன் மேசியா.
5. BRANHAM GOOD NEWS SOCIETY இயேசு மட்டும் இயக்கம். வருகிற கிறிஸ்து பிரன்ஹாம். இயேசு கிருஷ்டிக்கப்பட்டவர். (புத்தகத்தில் ஒரு பெரிய கழுகு பறந்து இறங்குவது போன்ற சின்னம் இருக்கும்).
6. CHILDREN OF GOD (FAMILY OF LOVE) கடவுளின் பிள்ளைகள் அன்பின் குடும்பம். இயேசு சிருஷ்டிக்கப்பட்டவர். மூ கடிதங்கள். சகலமும் பொதுவாய் அனுபவித்தனர். மனைவியையும் (அப்போஸ்தலர் 2:44)
7. THE WORLD WIDE CHURCH OF GOD (THE PLAIN TRUTH) உலகளாவிய தேவ சபை இரட்சிப்பு மனித முயற்சியால் வருகிறது.

8. THE WAY INTERNATIONAL அகில உலக வழி (TV, Ambassador college) (விக்டர் பால் வியர்வில்) இயேசுவின் தெய்வீகத்தை மறுதலிக்கிறது.

9. MARMONISM (Latter day saints) மோர்மோனிலும்—பிற்கால பரிசுத்தர்கள். Book of mormon, another testament of Jesus Christ புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டது. ஏனோக்கின் ஐக்கிய வரிசை சபை Nauvoo expositor magazine.

10. மணவாட்டி சபை நாங்களே ஸ்திரிகளால் கறைப்படுத்தாதவர்கள் – திருமணமாகாதவர்கள், திருமண உறவு தேவன் ஏற்படுத்தியது தவறு என கூறுதல்.

11. ROMAN CATHALIC (RC) கத்தோலிக்க திருச்சபை மரியாள், மாதா தெய்வம், சிலை வழிபாடு, மனிதர்கள் – புனிதர் மத்தியஸ்தர்.

வேதாகமம்
இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

இரட்சிப்பு

வேதாகமம்

இரட்சிப்பு

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

**www.ratchipu.com**